**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

07.08.2025

O.S. No. 291/2022

P.W. 2 திரு. அழகப்பன்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

இந்த வழக்கில் உள்ள வாதி மற்றும் பிரதிவாதி எனது சொந்தக்காரர்கள் என்றால் சரிதான். வாதி அழைத்துள்ளதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு என்ன வழக்கு என்ற விவரம் எனக்கு தொியுமா என்றால் தொியும். 1961 ல் ஏற்பட்டதாக வாதி ஒரு ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதனுடைய எண் என்ன என்று தொியுமா என்றால் தொியாது. அந்த ஆவணம் யார் யாருக்கு எழுதியது என்ற விவரமும் எனக்கு தொியுமா என்றால் தொியாது. வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள செற்றில்மெண்ட் ஆவணத்தை பற்றி எனக்கு எந்த விவரமும் தொியாது என்றால் சரிதான். வாதியின் அப்பாவிற்கு நான் கூறியுள்ளது போல எவ்வாறு வழக்கு சொத்து உரிமைபட்டது என்று தொியுமா என்றால் அவருடைய பூர்வீக சொத்து. எந்த ஆவணத்தில் அடிப்படையில் அவருக்கு உரிமைப்பட்டது என்றால் ஆவணத்தில் அடிப்படையில் அல்ல. அவர்களுடைய மூதாதையரிடமிருந்து அவருக்கு கிடைக்கப் பெற்றது. 3 ஆவது மற்றும் 4 ஆவது பிரதிவாதிகளுக்கு நா்ன பிரமாண வாக்குமூலத்தில்

கூறியுள்ளவாறு என்ன சொத்துக்கள் கொடுத்தார்கள் என்றால் சொத்துக்கள் கொடுத்தார்கள் என்று தொியும், எந்த சொத்து என்று தொியாது. எந்த சொத்துமே 3 ஆம் பிரதிவாதிக்கு கொடுக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தொியாது. 1 வது பிரதிவாதி, வாதியின் வீட்டில் எப்போது வரை குடியிருந்தார் என்று தொியுமா என்றால் அவருடைய அப்பா இறந்து சில மாதங்களுக்கு பிறகு 2016 வரையில் குடியிருந்தார். 3 ஆம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் நடந்தது என்று தொியுமா என்றால் நான் சிறுவயதாக இருக்கும்போது நடந்தது. எந்த வருடம் என்று தொியாது. எனக்கு அப்போது என்ன வயது இருக்கும் என்றால் 10 அல்லது 12 வயது இருக்கும். சீதனங்கள் கொடுத்ததாக நான் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு என்ன என்ன சீதனங்கள் கொடுத்தார்கள் என்றால் அது எனக்கு தொியாது. 2009 ல் வாதியின் அப்பா எழுதியதாக நான் குறிப்பிட்டுள்ள வா.சா.ஆ. 9 உயிலில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ஆவணத்தின் பதிவு எண், தேதி போன்ற விவரங்கள் தொியுமா என்றால் தொியாது. 1 வது பிரதிவாதியை, வாதி வீட்டிற்கு உள்ளே அனுமதிக்கவில்லை என்று சொல்லி வாதி வடசேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தொியுமா என்றால் தொியாது. 2022 ல் ரவுடிகள் வந்ததாக நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சம்பவம் குறித்து போலீசில் புகார் கொடுத்தார்களா என்றும், அதன் விவரம் என்ன என்று தொியுமா என்றால் புகார் கொடுத்தார்கள், அதன் விவரம் என்ன என்று தொியாது, மறுநாள் போலீசார்கள் வந்தார்கள். வாதி எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு சித்தப்பா முறை. வாதி எனக்கு சித்தப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம்

அளிக்க வந்துள்ளேன்என்றால் சரியல்ல, கண்ணால் பார்த்ததை சொல்லியுள்ளேன். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரமும் எனக்கு தொியாது என்றால் சரியல்ல, அவருக்கு உரிமைப்பட்ட சொத்து அவருடையதுதான் என உறுதிபடுத்துவதற்காக தாக்கல் செய்துள்ளார். வாதியின் தந்தை 1 ஆம் பிரதிவாதிக்கு 1961 லியே செற்றில்மெண்ட் செய்துவிட்டதால் வாதிக்கு தாவா சொத்தில் உரிமை எதுவும் இல்லை என்றால் அந்த பத்திரம் பற்றி எனக்கு தொியாது. வா.சா.ஆ. 9 உயில் ஆவணத்தில் வேறு சாட்சிகள் கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் அது குறித்து எனக்கு தொியாது. அந்த உயிலை வாதியின் அப்பா, என்னுடைய அப்பாவிடம் காண்பித்தார். அப்போது அவ்வாறு உயில் எழுதியதாக சொன்னார். நான் சொல்வது போல அப்படி ஒரு உயிலை வாதியின் அப்பா, எனது அப்பாவிடம் காண்பிக்கவே இல்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (1 ஆம் பிரதிவாதி தரப்பில்) -</u>**

3 மற்றும் 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் மேலே செய்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.